மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

பல்லாவரம்.

# O.S .No.670/2023 (c/w OS 658/2023)

# Old.No.914/2013

# DW 1

இந்நீதிமன்றத்தில் Gr-III பெஞ்ச் கிளார்க் திரு.பூபதி அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகளின் வாக்குமூலம் 1973ஆம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைக்கு உட்பட்டு இன்று 2024ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 12ஆம் நாள் என்னால் பதிவு செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : பிரபாவதி | முதம் | : | இந்து |
| தந்தை / கணவர் பெயர். | : நீலகண்டன் | ஊர் | : | |
| வயது | : | | | |
| தொழில் | : | | | |
| இனம் | : | | | |
| கிராமம் | : | | | |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

நான் தற்போது விஜயலட்சுமி பண்டிட் தெருவில் வசித்து வருகிறேன் வழக்கு சொத்தில் வசிக்கவில்லை. ஒடு போட்டு வைத்துள்ளேன். பார்வதி என்பவரிடம் நான் 2012ல் எவ்வளவு சொத்தினை விற்றுள்ளேன் என்றால் 600 சதுரஅடி. அவை வா.சா.ஆ. 15 மூலம் கிரையம் கொடுத்துள்ளேன். வா.சா.ஆ 14ல் மூலம் நான் கணேசன் என்பவரிடம் கிரையம் பெற்றுள்ளேன்னா என்றால் இல்லை நடராஜன் என்பவரிடம் வாங்கியுள்ளேன். நடராஜன் மேற்படி சொத்தினை யாரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் விவரம் தெரியாது. 1969ல் சுப்பிரமணி என்பவரிடம் இருந்து நடராஜன் என்பவர் மேற்படி சொத்தினை கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.14 மூலம் 1969ல் சுப்பிரமணி என்பவரிடம் இருந்து சொத்தினை கணேசனிடம் கிரையம் பெற்றுள்ளாரா

என்றால் இருக்கலாம் எனக்கு நியாபகம் இல்லை. வா.சா.ஆ14 மூலம் அடி மனை நீங்கலாக கூரைக்கொட்டா மட்டும் 300சதுரஅடி இடத்தினை கிரையம் கொடுத்துள்ளாரா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

சுப்பிரமணி என்பவர் கணேசன் என்பவருக்கு 300 சதுரஅடி தான் கிரையம் கொடுத்துள்ளார் என்றும் நான் கிரையம் பெற்றுள்ள 1145 சதுரஅடி அதிகமாக ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளதா என்றால் சரியல்ல. நான் கணேசன் என்பவரிடம் தவறுதலாக 1145 சதுரஅடி மனை இல்லாமல் கிரையம் பெற்றுள்ளேனா என்றால் சரியல்ல. 2012 பார்வதி என்பவரிடம் 600 சதுரஅடி சொத்தினை கிரையம் கொடுத்த பின்னர் பொய்யாக இவ்வழக்கின் மனோகரன் என்பவர் மீது இல்லாத இடத்தை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. ஆலந்துார் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 194/2013(இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 658/23) என்று வாதி மீது வழக்கு சொத்து என்னுடையது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம். எனக்கு சேரவேண்டிய 600 சதுரஅடியை கிரையம் கொடுத்துவிட்டு வாதி மனோகரன் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல.

வா.சா.ஆ11 மூலம் புகைப்படத்தில் காணப்பட்டுள்ள மதில் சுவரினை யார் கட்டியுள்ளார் என்றால் நான் தான். எந்த வருடத்தில் நான் அந்த சுவற்றினை கட்டினேன் என்றால் நியாபகம் இல்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு மதில் சுவரை கட்டியுள்ளேனா என்றால் வாதி தகராறு செய்தவுடன் கட்டினேன். 1990ல் இருந்து நான் கிரையம் வாங்கிய தேதியில் இருந்து 2012 வரை வழக்கு சொத்தில் சுவர் எதுவும் இல்லாமல் காலியாக இருந்தது என்றால் ஆம். மேற்படி அந்த காலி இடம் வழியாக தான் வாதி மனோகரன் சென்று வந்து வழியாக பயன்படுத்தி வந்துள்ளாரா என்றால் சரியல்ல. மேற்படி அந்த இடமானது வாதி மனோகரனுக்கு சொந்தமானது என்றும் அவை காலியாக இருந்து வந்துள்தால் வழியாக பயன்படுத்திவந்துள்ளாரா என்றால் இல்லை. நான் கிரையம் வாங்கிய தேதியில் இருந்து 2012 வரை ஏன் சுவர் கட்டவில்லை என்றால் தகறாறு செய்ததால் கட்டியுள்ளேன்.

வாதி பிரதான சாலைகளுக்கு சென்றுவர இருந்த வழியினை தடுத்துள்ளதால் அவருக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்கு நான் பொறுப்பாவேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்திற்குக்கான பட்டா மற்றும் அடங்கல் உள்ளதா என்றும் அவற்ளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம். மேற்படி வழக்கு சொத்திற்கு சொத்து வரி கட்டியுள்ளேனா என்றால் ஆம். வரிரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம் . வழக்கு சொத்திற்கு அனுபவசான்று உள்ளதா என்றால் ஆம். நான் வழக்கில் பட்டா சிட்டா அடங்கல் போன்ற எதையும் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேனா என்றால் சரியல்ல. வழக்கு சொதத்திற்கான கேஸ் ரசீதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம். பி.சா.ஆ2 குடும்ப அட்டை என்றும் புதிய குடும்ப அட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பி.சா.ஆ.3ல் நகராட்சியின் முத்திரையோ ஆணையரின் கையோப்பமோ இல்லை என்றும் மேற்படி ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பி.சா.ஆ4ல் 2012ல் கிரையம் கொடுத்துள்ள சொத்திற்கு பொய்யாக வரி ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. வாதி மனோகரன் என் மீது தாக்கல் செய்துள்ள வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சண்டை போட்டுள்ளதாக வழக்கு போட்டுள்ளது. வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், நான் வழக்கு சொத்தினை கிரையம் கொடுத்துவிட்டு வேறு இடத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல எனக்கு உரிமையில்லாத சொத்தில் மதில் சுவரை எழுப்பி வாதி மனோகரனுக்கு இடையூறு கொடுத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. எனக்கு 300 சதுரஅடி தான் சொந்தமானது என்றும் 1145 சதுரஅடிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல.

தனசேகரன் என்பவருக்கும் எனக்கும் இடையே உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் ஆம். தனசேகரன் என்பவர் இடத்தயையும் வாதி மனோகரன் என்பவர் ஆக்கிரமித்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. நான் எனது மகனுடைய செல்வாக்கினை பயன்படுத்தி வாதி மனோகரன் இடத்தில் சுவா் கட்டியுள்ளதால் வழக்கு சொத்தில் எனக்கு உரிமை இல்லாததால் வாதி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்670/2023 என்ற

வழக்கு செலவு தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்650/2023 என்ற வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிவுற்றது.**

**மறுவிசாரணை இல்லை**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx

District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.